**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, அப்படி ஒரு குறை இருந்துகொண்டிருக்கிறது. அதிகாரிகள் ஏதாவது ஒரு பெரிய கிராமத்திற்குச் சென்று, அங்குள்ள பெரிய விவசாயிகளை மட்டும் பார்த்துவிட்டு வந்துவிடுகிறார்கள் என்ற குறை இருக்கிறது. ஆகையால் மாதிரிப் பண்ணைகள் பல அமைத்து, எல்லா விவசாயிகளையும் அழைத்து, ஆய்வின் பலன்களை விளக்க வேண்டும் என்ற திட்டம் ஆய்வில் இருக்கிறது.

*New Agricultural Seed Farms*

* 496 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the Government have received any proposal from the Agricultural University at Coimbatore on the question of starting an Agricultural Seed Farm in this State; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

* 497 **வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காப்பி, தேயிலை, வாழை, புகையிலை போன்ற பயிர்களை நல்ல முறையில் அபிவிருத்தி செய்திட அவைகளுக்கான விதைப் பண்ணைகளைத் துவக்கிடும் திட்டம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** இல்லை.

**திரு. என் கிட்டப்பா :** தலைவரவர்களே, அவரை முதல் துவரை வரை ஆராய்ச்சி செய்யப்பட்டதாகச் சொன்னார்கள். அப்படி இருக்கும்போது காப்பி, தேயிலை, வாழை, புகையிலை போன்ற பயிர்களை அபிவிருத்தி செய்வது பற்றியும் இனிமேலாவது ஆராய்ந்து அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, இந்த காப்பி, தேயிலை, புகையிலை போன்ற பயிர்கள் எல்லாம் அவரை முதல் துவரை வரை என்ற பகுதியில் அடங்காது. காப்பிக்கு